

கள்ளக்குறிச்சி நகராட்சி 1வது வார்டு பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட கொடி கம்பத்தில் மாநில மருத்துவ அணி துணைத் தலைவர் மருத்துவர் எ.வ.வே.கம்பன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கழக கொடி ஏற்றி வைத்து கல்வெட்டை திறந்து வைத்தார். அருகில் தெற்கு மற்றும் வடக்கு மாவட்ட கழக செயலாளர்கள் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. மற்றும் தே.மலையரசன் எம்.பி. ஆகியோர் உடன் உள்ளனர்.



கோவை தெற்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் பெரிய நெகமத்தில் நடைபெற்றது. கோவை தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தளபதி முருகேசன் சபாபதி மோகன் ஆகியோர் உரையாற்றினர். மு.கண்ணப்பன், கே.ஈஸ்வரசாமி, கே.வி.சுப்பிரமனியன், சாமிநாதன், பொன்னுசாமி, கனிமொழி, ஜெயபிரகாஷ், தமிழ்மணி, தென்றல் செல்வராஜ், கே.எம்.நாகராஜ், சித்திக், தினகரன், ஏர்போர்ட் ராஜேந்திரன், இருகூர் சந்திரன், மு.க.முத்து மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா – தி.மு.க. பவள விழா!

# பரமத்தி வேலூரில் 60 அடி நினைவு கொடிக்கம்பம் திறப்பு விழா!

## நாமக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் மதுரா செந்தில் அறிக்கை!

நாமக்கல், செப். 12-

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிக்கை வருமாறு:-



பரமத்திவேலூர் தொகுதி புதிய கட்டிட அலுவலகம் கலைஞர் அரங்கம் திறப்பு விழா கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதியார் அவர்களின் நல்லாசியுடன், கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துக்களுடன் இன்று (செப்டம்பர் 12ஆம் தேதி வியாழக்கிழமை), காலை 10.00 மணியளவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் கழக பவள விழா ஆண்டை முன்னிட்டு வேலூரில் 60 அடி நினைவு கொடிக்கம்பத்தில் கழக இருவண்ணக்கொடியை கழக துணை பொதுச்செயலாளர் அந்தியூர் பி.செல்வராஜ் ஏற்றி வைத்து சிறப்பிக்க உள்ளார்.

மேலும், காலை 10.30 மணிக்கு பரமத்திவேலூர் தொகுதி புதிய கட்டிட அலுவலகம் கலைஞர் அரங்கம், இ சேவை மையம், கலைஞர் படிப்பகம் மற்றும் புதிய பொது உறுப்பினருக்கான அட்டை வழங்கும் விழா பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் மற்றும் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் திறந்து வைத்து சிறப்புரையாற்றவுள்ளார்கள்.

மாநில வர்த்தக அணி துணைத் தலைவர் கே.எஸ்.மூர்த்தி, கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, மாநில இளைஞர் அணி துணை செயலாளர் பி.எஸ்.சீனிவாசன் மற்றும் மாநில மகளிர் தொண்டர் அணி துணை செயலாளர் ஜே.ரேகா பிரியதர்ஷினி ஆகியோர் முன்னிலையில் நடைபெறவுள்ளதால், இந்நிகழ்வுகளில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள், பாக முகவர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.



கோவை மாநகர் மாவட்டத்திற்குட்பட்ட தெற்கு சட்டமன்றத் தொகுதி, பெரியகடை வீதி பகுதி181 வது வட்டக் கழகம் சார்பில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா.கார்த்திக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். எம்.மனோகரன், பா.ஆனந்த், அப்பாஸ், கல்பனா செந்தில் பி.நாச்சிமுத்து, மு.இரா.செல்வராஜ், lpf தமிழ்ச் செல்வன், ச.கார்த்திகேயன், பழக்கடை முத்து முருகன்,என்.ஜே.முருகேசன், நா.தங்கவேல், என்.ராஜா, எம்.புவனா ஆர்.முருகேஷ், கேசவன், மில் முருகன்,கோபி, மார்க்கெட் எம்.சோமு, ராஜேந்திர பிரபு, ரங்கராஜ்,பாலன், வைரம் செந்தில், கார்த்திக், தினேஷ் குமார், ஆட்டோ ரவி, முருகேசன், செல்வராஜ், நாகராஜ், கோவிந்தராஜ், மகளிரணி எம்.புவனேஸ்வரி, எம்.சித்திக் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### தி.மு.க. பவள விழா - முப்பெரும் விழா!

# கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் முழுவதும் இல்லங்கள்தோறும் கழக கொடி பறக்கட்டும்!

## கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் அறிக்கை!

கிருஷ்ணகிரி, செப். 12-

தந்தை பெரியாரின் கொள்கைகளை ஜனநாயக வழியில் சட்டங்களாகவும், திட்டங்களாகவும் நிறைவேற்றிடும் நோக்கத்துடன் பேரறிஞர் அண்ணா அவர்களால் 1949 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கட்டிக்காக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் எனும் அரசியல் பேரியக்கம் 75 ஆண்டுகளாக மக்களுக்குப் பணியாற்றி இந்த 2024 ஆம் ஆண்டு தனது பவள விழா நிறைவினைக் கொண்டாடுகிறது.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு தளபதியார் அவர்களின் ஆணைப்படி "பவளவிழாவையொட்டி கழகக் கொடிக் கம்பங்கள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டு, அதில் அந்தந்தப் பகுதியில் கழகத்திற்காக அல்லும், பகலும் உழைத்த மூத்த முன்னோடிகளின் கரங்களால் நம் இருவண்ணக் கொடியை ஏற்றிப் பட்டொளி வீசிப் பறந்திடச் செய்திட வேண்டும்" என மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதைத் தொடர்ந்து வீதிகள் தோறும் பறக்கும் இருவண்ணக்கொடி நம் வீடுகள்தோறும் பறந்திட வேண்டும். கழகக்கொடி பறக்காத கழகத்தினரின் வீடுகளே இல்லை என்னும் வகையில் பவளவிழாவை முன்னிட்டு நம் அனைவரது இல்லங்கள், அலுவலகங்கள், வணிகவளாகங்களில் கழகக்கொடி ஏற்றிக் கொண்டாட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.





கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், சின்னசேலம் வடக்கு ஒன்றிய கழகம் சார்பில் நடைபெற்ற கழக பொது உறுப்பினர் ஆலோசனை கூட்டத்திற்கு வடக்கு மாவட்டக் கழக செயலாளர், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் சிறப்பான அழைப்பாளராக கலந்து கொண்டு கழக நிர்வாகிகளுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார், இதில் வடக்கு ஒன்றிய கழக செயலாளர், ஒன்றிய குழு துணை பெருந்தலைவர் வி.வி.அன்புமணி மாறன் மற்றும் மாவட்ட, ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### எம்.அப்துல்மாலிக் வரவேற்புரை!

# செம்பனார்கோயில் தெற்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., சிறப்புரை!

மயிலாடுதுறை. செப். 12

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் தெற்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் சங்கரம்பந்தல் இலுப்பூர் ரமாட்டி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஒன்றிய அவைத் தலைவர் பாண்டு (எ) என்.ராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார். மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஏ.சி.என்.விஜயபாலன், எம்.எம்.சித்திக், மாவட்ட துணைச் செயலாளர் மு.ஞானவேலன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பி.எம்.அன்பழகன், அமுர்தவிஜயகுமார், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.சி.என்.விஜயபாலன், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஶ்ரீதர், பொதுக்குழு உறுப்பினர்கன் நத்தம் ஏ.வின்சென்ட், ஜெ.கபிலன், எஸ்.வெற்றிவேல், அர்ஷத், பேரூர் கழகச் செயலாளர் எஸ்.கே.முததுராஜா, ஒன்றியக் குழு தலைவர் நந்தினிஶ்ரீதர், துணைத்தலைவர் பாஸ்கர், ஒன்றிய துணைச் செயலாளர் மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ரபியாநர்கிஸ்பானு துளசி ரேகாரமேஷ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைர்பாளர் ஜெ.கே.வினோத்பாண்டியன், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிளைப்பாளர் கே.விக்னேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.அபதுல் மாலிக் வரவேற்றார்.

கூட்டத்தில் மயிலாடுதுறை மமாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் சிறப்புரையாற்றினார். மாவட்ட பிரதிநிதிகள் கே.எஸ்.எஸ்.கருணாநித, ஈச்சங்குடி க. இளங்கோவன், கே.பி.ராஜா, ஒன்றிய பொருளாளர்

ஏ.ரெங்கராஜ், துணைச் செயலாளர்கள் கா.இளங்கோவன், எஸ்.சிவக்குமார், செல்லமாள் பன்னீர்செல்வம் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.


எண்ணற்ற திட்டங்களை தமிழ்நாட்டிற்கு தந்து சிறப்பாக ஆட்சி செய்யும் தளபதி அவர்களின் தலைமையிலான தி.மு.க. ஆட்சி 2026 சட்ட மன்ற தேர்தலிலும் தொடர்ந்திட தலைவர் தளபதி அவர்களின் இலக்கான 200 இடங்கள் என்ற இலக்கை எட்டிடும் வகையில் செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிளைகளிலும் கழகத்தினர் கழக அரசின் திட்டங்களை பொதுமக்களிடம் எடுத்து கூறும் வகையில் வரும் சட்ட மன்ற தேர்தல் பிரச்சாரத்தை இப்பொழுது இருந்தே தொடங்கிடுவது என்று

சென்னையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டு, மயிலாடுதுறை மாவட்ட பொது உறுப்பினர் கூட்ட தீர்மானத்தின் படி, கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிளைகளிலும் கிளைக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டத்தை கூட்ட வேண்டும் என்றும், பொது உறுப்பினர்கள் கூட்ட தீர்மான நோட்டை தலைமைக் கழகத்திற்கு எடுத்து செல்லும் வகையில் ஒன்றியக் கழகம் மூலம் மாவட்டக் கழகத்திடம் ஒப்படைக்க தீர்மான நோட்டை அந்த கிளை செயலாளர்கள், நிர்வாகிகள் ஒன்றிய கழகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிவைற்றப்பட்டது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பெ.சு. திருவேங்கடம்

**செப்டம்பர் 12 (2022)**



1954ஆம் ஆண்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்ற தொடங்கி கிளாம்பாடி கிளைச் செயலாளராகி, அதனைத் தொடர்ந்து ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், சட்டதிட்டக்குழு உறுப்பினர், தேர்தல் பணிக்குழுச் செயலாளர், சொத்துப் பாதுகாப்புக்குழுச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

பல்வேறு கூட்டுறவு சங்கங்களில் செயலாளர், தலைவர் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர், ஒன்றியக்குழு துணைத் தலைவர், ஒன்றியக்குழு தலைவர், நான்கு முறை கலசப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என பல பொறுப்புகள் வகித்து, மக்கள் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

2017ஆம் ஆண்டு திண்டுக்கல்லில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் கழகத் தலைவர் அவர்கள் திருக்கரங்களால் "அண்ணா விருது" பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு பல முறை சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். ஶ்ரீதர்

**செப்டம்பர் 12 (2020)**



தனது இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

நாகப்பட்டினம் நகரத்தில் வட்ட பிரதிநிதியாகவும், நகர இளைஞர் அணி அமைப்பாளராகவும், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

நாகப்பட்டினம் நகர் மன்ற உறுப்பினராக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**